# சாதாரண கூட்டம்.

2023– ம் ஆண்டு ஜுன் மாதம் 28–ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சாதரணக் கூட்டம் வடலூர் நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

முன்னிலை திரு. சு.சிவக்குமார்
நகர்மன்ற தலைவர்
வடலூர் நகராட்சி.

**மன்றப்பொருள் எண்: 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் (திட்டம்) அவர்களின் 04.04.2023 தேதிய தொலைபேசி செய்தியின்படி ந.க.எண்.33454/2022/சிஎப்சி நாள்.01.11.2022ல் அனுதிக்கப்பட்ட வட்டார சுகாதார நிலையம் (PHC), ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வக கட்டிடம் (BPHC) மற்றும் துணை சுகாதார நிலைய (HSC) பணிகளில் வட்டார சுகாதார நிலையம் (PHC) தவிர ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வக கட்டிடம் (BPHC) மற்றும் துணை சுகாதார நிலைய (HSC) பணியில் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதுலாக உள்ள செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வக கட்டிடம் (BPHC) பணிக்கு 56.00 இலட்சம் கூடுதலாக 6.00 மற்றும் துணை சுகாதார நிலைய (HSC) பணிக்கு 33.00 இலட்சம் கூடுதலாக 3.00 இலட்சம் ஆக மொத்தம் 9.00 இலட்சம் கூடுதல் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் மேற்படி இரண்டு பணிகளுக்கும் தொழில் நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி செயற்பொறியாளர். செங்கல்பட்டு மண்டலம். அவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

<u>1.</u> மேற்படி பணிக்கு கூடுதலாக உள்ள செலவினம் ரூ 9.00 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2.ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வக கட்டிடம் (BPHC) மற்றும் துணை சுகாதார நிலைய (HSC) பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி செயற்பொறியாளர். செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம்.

**கோப்பு எண். 640/2022/இ1**

**மன்றப்பொருள் எண்: 2**

புதிய பேருந்து நிலையம் அமைத்தல் பணி மாண்புமிகு நகர்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் சட்ட மன்ற பேரவை அறிவிப்பில் (2022 – 2023) கடலூர் மாவட்டம் வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சேராக்குப்பம் கிராமம் புல எண். 306/4ல் நகராட்சிக்கு சொந்தமான பழைய வள்ளலார் பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட கட்டமைப்பு வடிவமைப்பு குறித்து உறுதி செய்து சான்றினை அனுப்பி வைக்கும்படி அண்ணாமலை பல்கலைகழகத்திற்கு கடிதம் வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கட்டிட வடிவமைப்பு பிரிவு, அண்ணாமலை பல்கலைக்கழகம் மேற்படி கட்டிட வடிவமைப்பை உறுதி செய்து சான்று வழங்க தொகை ரூ.70,000/- வழங்குமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்.137/2022/இ1**

**மன்றப்பொருள் எண்: 3**

வடலூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் அவற்றை அப்புறப்படுத்திட, நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 5000 சதுர மீட்டர் அல்லது தினசரி 100 கிலோவிற்கு மேல் மொத்த கழிவுகளை உருவாக்கிடும் வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வழிகாட்டு தலங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் மற்றும் மத்திய மாநில அரசு நிறுவனங்களில் பெருமளவில் திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் ஈரக்கழிவுகள், உலர் கழிவுகள் என தனித்தனியே பிரித்து ஈரக்கழிவுகளை தங்களுக்கு சொந்தமான இடத்தில் வைத்து உரமாக்கிடவும், அதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தி கொள்ளவேண்டும் எனவும், மறுசுழற்சிக்கான உலர் கழிவுகளை மறுசுழற்சியாளரிடமோ அல்லது நகராட்சிவசமோ ஒப்படைப்பு செய்யவேண்டும். தங்கள் நிறுவனத்தில் இடமில்லாத பட்சத்தில் மற்ற நிறுவனங்களுடன் இணைத்து இயற்கை உரம் தயாரிப்பதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி பொதுதுகாதாரத்திற்கு தொல்லைதரக்கூடிய, அழுகக்கூடிய, கழிவுகள் எதனையும், சேகரித்து வைத்திடவோ அல்லது பொது இடங்களில், தெருக்களில் சாக்கடைகால் வாய்களில் தூக்கி எரிவது, கொட்டுவது மற்றும் எரிப்பது ஆகிய செயல்கள் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும், தொழிலிடத்திலோ அல்லது கூட்டமாக சேர்ந்தோ கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொள்ள இயலாத நிலையில் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின் படி ஒவ்வொரு நிகழ்விற்குமான உபயோகிப்பாளர் சேவைக்கட்டணத்தை முன்னதாக நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது வைத்திருக்கும் பட்சத்தில் ஈரக்கழிவுகள், உலர் கழிவுகள் என தனிதனியான பிரித்து வழங்கப்பட்டால் திடக்கழிவுகள் நகராட்சியால் அப்பறப்படுத்தப்படும் உபயோகிப்பாளர் கட்டணம் செலுத்தாத நிலையில் நகராட்சியால் கழிவுகள் அப்பறப்படுத்தப்படமாட்டாது எனவும் அறிவிப்பு தயார் செய்து தினசரி நாளிதழான தினகரன் நாளிதழில் 06.06.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு ரூ.21420/– Kal publications (P) Ltd அவர்களுக்கு வழங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.21420/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 351/2022/எச்1**

**மன்றப்பொருள் எண்: 4**

வடலூர் நகராட்சியில் பயன்பாட்டிலுள்ள பொதுமகளிர் கழிப்பிடம் , பழைய பேருந்து நிலையத்துல் கழிப்பிடத்திலுள்ள கழிவு நீர், தொட்டிகள் நிரம்பிய நிலையில் இருந்த்ததால் சக்திவேல் செப்டிக்டேங்க் கிலினிங் சர்வீஸ் மூலம் கழிவுநீரை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. 1. பழைய பேருந்து நிலையம் கழிவுநீர் தொட்டிக்கு 16 நடையும், வார்டு 27,25ல் மகளிர் பொது கழிப்பிடம் 6நடையும், வார்டு 20,26 ஆர்.சி காலணி தோமையார் நகர், அந்தோணியர் நகர் மகளிர் பொது கழிப்பிடம் 6 நடையும், வார்டு 01 பூசாலிக்குப்பம், நந்தானார் நகரில் 6 நடையும் கழிவு நீர் தொட்டியினை சுத்தம் செய்யப்பட்டுள்ளது எனவும் , துப்புரவு மேற்பார்வையாளர் (கூ.பொ) மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் 11.05.2023ம் நாளிட்ட குறிப்பானை அடிப்படையில் அப்பணிகளை செய்தமைக்கும், அதற்கான செலவினம் ரூ.40800/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2023/எச்1.**

**மன்றப்பொருள் எண்: 5**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகள் சாதனை கூட்டங்கள் நடத்துவதற்கும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக சூழ்ந்துள்ள பகுதிகளில் பொது இடங்களில் இரண்டு ஆண்டு சாதனை விளம்பரப்போர்டு 18 இடங்களில் வைப்பதற்கு 1. அறம் டிஜிட்டல் கடை 2. ஆனந்து அரி ARB ஏஜன்சி மூலம் வரப்பெற்ற டிஜிட்டல் பேனர் 10x12 பிரேம், 10x10, பிரேம் மொத்தம் 18 இடங்களில் போஸ்ட் கழியால் சாரம் கட்டி விளம்பரப்படுத்தப்பட்டதற்கான தொகை ரூ.70100/- செலவினத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | |
|---|---|
| 1. 25.04.2023 அன்று 10x12 சைஸ் பேனர் 6 இடம் | 7200 |
| 2. 06.05.2023 டிஜிட்டல் பேனர் போட்டது | 21400 |
| 3. 07.05.2023 சாரம் 18 இடம் பேனர் ஒட்டி பேட்டது | 16200 |
| 4. 07.05.2023 10x10 பேனர் போட்டது | 14400 |
| 5. 11.05.2023 டிஜிட்டல் பேனர் போட்டது | 3400 |
| 6. 02.06.2023 டி.வி விளம்பரம் செய்தது | 7500 |
| | ---------. |
| | 70100 |
| | --------- |

**அலுவலக குறிப்பு :**

1. விளம்பர பலகைகள் அமைக்கப்பட்டுதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 6**

வடலூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சிப்பணிகள் மற்றும் நகராட்சி இரண்டாண்டு சாதனைகள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை சம்மந்தப்பட்ட செய்தி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of the News paper | Naration | Bill No./Date | Amount (in Rs.) |
|---|---|---|---|---|
| 1 | தினகரன் | இரண்டாண்டு சாதனைகள் | KAL PUBLICATIONS (P)Ltd. 3300424492/ 01.06.2023. | **42000/-** |
| 2 | தினமணி | இரண்டாண்டு சாதனைகள் | Express publication (Madurai) Private Limited. TN1306214/14.06.2023. | **16000/-** |
| 3 | தினமலர் | இரண்டாண்டு சாதனைகள் | Dinamalar PD 23202586/06.06.2023. | **18900/-** |
| 4 | இந்து தமிழ் | இரண்டாண்டு சாதனைகள் | KN Media service KNMS000276/03.06.2023. | **28560/-** |
| 5 | தினத்தந்தி | இரண்டாண்டு சாதனைகள் | Daily thanthi Bill No. 2324 CDL 431019460/ 03.06.2023 | **22260/-** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.31/2021/அ1**

**மன்றப்பொருள் எண்: 7**

வடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் படி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து பெருவதற்கு பொதுசுகாதாரப் பிரிவில் தனியார் மயம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றின் ஒப்பந்த பணியாளர்களுக்கு பணிகள் சிரமமின்றி மேற்க்கொள்ள வழிபாதை தெரிவது குறித்து வார்டு வாரியாக வழிப்பாதை வரைபடம் வார்டு 01 முதல் 27 வரையிலான பகுதிகளுக்கு தயார் செய்து வழங்குவதற்கும், அதற்கான தோராய செலவினம். ரூ. 21,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 835/2022/எச்1**

**மன்றப்பொருள் எண்: 8**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ( out sourcing) தனியார் மயம் ஒப்பந்ததாரர்களுக்கு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தரம் பிரித்து பெருவதற்கு வார்டு வாரியாக தூய்மை பணியாளர்கள் பணிகள் மேற்க்கொள்வதற்கு வார்டு வாரியான வழியின் வரைபடம் தயார் செய்திட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் பெயர் மற்றும் விலாசம் | ஒருவரைபடத்திற்கான தொகை. ரூ |
|---|---|---|
| 1 | DIGITAL & ADVERTISEMENT PRINT, No.17 Kumbakonam Main Road, Kadampuliyur | 750/– |
| 2 | EMPIRE CONSTRUCTIONS & INTERIOFS, No.93 Neyveli Main Road, Vadalur.607 303 | 700/– |
| 3 | YAZH ACADEMY, 2nd floor Supabi complex, Near Rani & Rani Building, VadakuthuNeyveli- 607 308 | 650/– |

**அலுவலக குறிப்பு:** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் காணும் YAZH ACADEMY, 2nd floor Supabi complex, Near Rani & Rani Building, Vadakuthu Neyveli - 607 308 அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.835/2023/அ1**

**மன்றப்பொருள் எண்: 9**

கடலூர் மாவட்டம் வடலூர் நகராட்சியின் பொதுவிவரங்கள் , 2022–23ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாய் மற்றும் செலவின விவரங்கள், வளர்ச்சிப்பணிகள் குறித்த 2022–23ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்

**கோப்பு எண்.887/2023/சி1**

**மன்றப்பொருள் எண்: 10**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்கண்ட வாகனங்களுக்கு 2023–2024ம் ஆண்டிற்கான காப்பீடு தொகை செலுத்தக்கோரி The New India Assurance Co.Ltd. Cuddalore. நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. காப்பீடு தொகை உடனடியாக செலுத்த வேண்டியுள்ளதாலும், பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ரூ.**76153**/- (ரூபாய் எழுபத்தாரயிரத்து நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | தொகை |
|---|---|---|
| 1. | TN 31 AB 3855 | **18093/-** |
| 2. | TN 31 CA 7815 | **19120/–** |
| 3. | TN 31 BH 9135 | **20847/–** |
| 4. | TN 31 H 8721 | **18093/–** |
| | | **76153/–** |

**அலுவலக குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பொது சுகாதார பணி என்பதாலும் , வாகனங்களுக்கு காப்பீடு தொகை உடனடியாக செலுத்த வேண்டியுள்ளதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 885/2023/எச்1**

**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி**